செ.வெ.எண்.437 நாள்.04.09.2017

# செய்திவெளியீடு

## படைப்பணிபுரியும் குடும்பத்தினர் மற்றும் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்புகுறைதீர்க்கும் நாள் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் இந்நாள் / முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் / படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 08.09.2017ம் தேதி அன்று காலை 10.00 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த இந்நாள் / முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் தங்கள் அசல் படைவிலகல் சான்று மற்றும் அடையாள அட்டையுடன் 08.09.2017 அன்று காலை 10.00 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தங்கள் குறைகள் அடங்கிய மனுக்களை வழங்கலாம் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவிக்கிறார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.